13

# 1. கத்தரித் தோட்டத்து வெருளி

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் சிறுவர்க்கான இலக்கியம் படைத்தவர். ‘தங்கத் தாத்தா’ என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். அவர்கள் ஆடிப்பாடி மகிழ ஆயிரக்கணக்கான பாடல்களைத் தந்தார் அப் பாடல்கள் பாடி மகிழ்வதற்கு ஏற்ற ஓசை நயமுடையவை அர்த்தபூர்வமானவை.

தோட்டங்களின் மத்தியில் வெருளிகளைக் கண்டிருப்பீர்கள். காய்கறிகளை மிருகங்களும் பறவைகளும் அழித்துவிடும். அதனைத் தடுப்பதற்காகவே பொம்மை வடிவிலான வெருளிகள் வைக்கப்படும். இவற்றைக் கண்டால் மிருகங்களும் பறவைகளும் பயந்துவிடும். இரவில் திருட எண்ணும் திருடர்களும் ஆள் நிற்பதாகப் பயந்து ஓடிவிடுவார்கள். இப் பாடல் நகைச்சுவையாகவும் பொருள் கொண்டதாகவும் விளங்குகிறது.



கத்தரித் தோட்டத்து மத்தியிலே – நின்று
காவல் புரிகின்ற சேவகா – நின்று
காவல் புரிகின்ற சேவகா
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார் - உன்னைப் போல்
வேலை புரிபவன் வேறுயார்?
கண்ணும் இமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா – என்றும்
காவல் புரிகின்ற சேவகா

எண்ணி உனைப்போல் இரவு பகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? – என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?

வட்டமான பெரும் பூசணிக்காய் போல
மஞ்சள் நிற உறுமாலைப் பார் - தலையில்
மஞ்சள் நிற உறுமாலைப் பார்
கட்டியிறுக்கிய சட்டையைப் பார் - அங்கே
கைகளில் அம்பொடு வில்லைப் பார், இரு
கைகளில் அம்பொடு வில்லைப் பார்.

பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ – உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ
வாட்டமில்லாப் பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக் கொண்டோடுதே – வெடி
வாலைக் கிளப்பிக் கொண்டோடுதே.

கள்ளக் குணமுள்ள காக்கை உனைக் கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே - கூடிக்
கத்திக் கத்திக் கரைந்தோடுமே
நள்ளிரவில் வரும் கள்வன் உனைக் கண்டு
நடுநடுங்கி மனம் வாடுமே–ஏங்கி நடுநடுங்கி மனம் வாடுமே.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| **சேவகன்** | - | பணியாள் |
| **இமையாமல்** | - | மூடாமல் |
| **ஏவல்** | - | பணி |
| **உறுமால்** | - | தலைப்பாகை |
| **அம்பு** | - | பாணம் |

## கிரகித்தற் பயிற்சி

1. கத்தரித் தோட்டத்து வெருளியைப் பாடியவர் யார் ?
2. வெருளியின் இரண்டு இயல்புகள் யாவை ?
3. உறுமால் எதனைப் போல் என்று கூறுகின்றார் ?
4. வெருளியின் பார்வை எப்படிப்பட்டது ?
5. வாலைக் கிளப்பிக்கொண்டு ஓடுவது யார் ?

## செயற்பாடு

ஆசிரியர் பாடலைப் பாட அவதானமாகக் கேளுங்கள்.
இசையுடன் சேர்ந்து பாடுங்கள்.

**'எனக்குச் சிறகு முளைத்தால்' என்ற தலைப்பில் பேசுங்கள்.**

நிறுத்தக் குறிகளை அனுசரித்துப் பாடலை உணர்வு பூர்வமாக வாசியுங்கள்.
காற்புள்ளி (,) அரைப்புள்ளி (;) முக்காற்புள்ளி (:) முற்றுப்புள்ளி (.) என்பனவற்றை அனுசரித்து வாசியுங்கள்.

**பாடலின் பொருளைச் சுருக்கி எழுதுங்கள்.**

# 2. ஆடிப்பிறப்பு

தமிழர்களின் விழாக்களுள் ஒன்றாக ஆடிப்பிறப்பு கொண்டாடப்படு கிறது. அன்றைய தினம் கொழுக்கட்டை அவிப்பர். கூழ் காய்ச்சுவர். குடும்பத்தினர் உறவினர்களுடன் கூழ் குடிப்பர். கொழுக்கட்டை உண்பர்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆடிப்பிறப்பைப் பற்றிப் பாடியுள்ளார். சிறுவர்கள் ஆடிப்பாடி மகிழ்வதைக் காட்டும் பாடல் இது.

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
  ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
  கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
  பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டுநல்ல
  மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
  வேலூரின் சர்க்கரை யுங்கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
  சுற்றிக்கு ழைத்துத்தி ரட்டிக்கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
  வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
  பார்க்கப் பார்க்கப்பசி தீர்ந்திடுமே.



பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்
மணக்க மணக்கவா யூறிடுமே.

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்துவிளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் புதுக் கூழ் குடிப்போம்.

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்நல்ல
மாவின் பழத்தை அறுத்துத்தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

## அரும்பதங்கள்

**ஆனந்தம்** - மகிழ்ச்சி
**பனங்கட்டி** - பனம் வெல்லம்
**மா** - மாம்பழம்
**தோண்டி** - பாத்திரம்
**இளநீர்** - இளந் தேங்காய் நீர்
**கொழுக்கட்டை** - ஒரு சிற்றுண்டி

## கிரகித்தற் பயிற்சி

### பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்

1. ஆடிப்பிறப்பு எப்போது கொண்டாடப்படுகிறது ?
2. ஆடிப்பிறப்பிற்குத் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் எவை ?
3. கொழுக்கட்டை அவிக்கத் தேவையான பொருட்கள் எவை ?
4. சர்க்கரை பெறப்பட்ட ஊர் எது ?
5. அம்மா அவித்த சிற்றுண்டியின் பெயர் என்ன ?

## செயற்பாடு

1. பாடலைக் கேளுங்கள்.
2. உங்களுக்குப் பிடித்த சிற்றுண்டி பற்றிக் கூறுங்கள்
3. சேர்ந்து இசையுடன் பாடுங்கள்
4. பாடலை உணர்வுடன் வாசியுங்கள்.
5. அரும்பதங்களுக்கு அகராதியில் பொருள் காணுங்கள்.

### பாடலின் இறுதி இரண்டு பகுதிகளையும் வாசியுங்கள். கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. பண்டிகையின்போது உண்ட பழங்கள் எவை ?
2. எதனைச் சுடச்சுட ஊதிக் குடித்தார்கள் ?
3. கொழுக்கட்டையை எப்படி உண்டார்கள் ?
4. கொழுக்கட்டையின் உள்ளீடு என்ன ?
5. கூழில் சேர்க்கப்பட்ட இனிப்பு என்ன ?

**பின்வரும் நகைச்சுவைத் துணுக்குகளை வாசியுங்கள்.**

**சிறுவன்** :- ‘ஏன் பாட்டி இந்த வயதில் ஐஸ்கிறீம் சாப்பிடுகிறீர்கள்?

**பாட்டி** :- ‘சின்ன வயதில் ஐஸ்கிறீம் சாப்பிட்டால் பல் கெட்டுப்போகும் என்று தாத்தா சொல்வார். அதனால் தான் இப்போ சாப்பிடுகிறேன்.

**ஒருவன்** :- அந்தப் பூச்சிக்குக் குளிராதா?

**மற்றவன்** :- அதுதான் கம்பளிப் பூச்சியாச்சே

**கோகுலன்** :- எங்கள் அப்பா பழத்தைக் காயாக மாற்றிவிடுவார். அது எப்படி முடியும் ?

**நிமலன்** :- எலுமிச்சம் பழத்தைக் காயாக்கி விடுவார்.

**கொக்கு** :- நரியண்ணா நான் உங்கள் வீட்டிற்கு விருந்தாளியாக வரட்டுமா ?

**நரி** :- ஒரு வாரம் பொறுங்கள். நான் ஒரு தட்டு வாங்கி வந்துவிடுவேன்.

**பிரியன்** :- மக்கள் பிறப்பதும், இறப்பதும் எப்போது முற்றுப் பெறும் ?

**கமலன்** :- சுவர்க்கமும், நரகமும் எப்போது நிறையுமோ அப்போது முற்றுப்பெறும்.

**நீங்களும் சிறு சிறு நகைச்சுவைத் துணுக்குகளை எழுத முயலுங்கள்.**